**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**SESSIONS CASE NO. 107/2014**

**Deposition of Witness for : PW 6**

| | |
|---|---|
| **Name** | : திரு. கங்கை அமரன் |
| **Father Name** | : |
| **Village** | : |
| **Taluk** | : |
| **Caste** | : |
| **Calling** | : |
| **Religion** | : |
| **Age** | : |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 30-09-2022.**

**முதல் விசாரணை** -

நான் தற்போது கீழ் சிறுபாக்கத்தில் வசித்து வருகிறேன். இறந்து போன பாபுவை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். சுமார் 9 ஆண்டுகளுக்கு முன்பு ஆஜர் எதிரிகளுக்கும், இறந்து போன பாபு வகையறாவுக்கும் சொத்து சம்மந்தமாக தகராறு இருந்து வந்தது. எதிரி சுந்தரமூர்த்தி என்பவர் பாபுவிடன் வந்து உங்க வீட்டில் யாரையாவது குலோஸ் பன்னால் தான் நீங்கள் சும்மா இருப்பீர்கள் என்று கூறி வந்தார். சம்பவ தினத்தன்று வீராசாமி வீட்டின் அருகே பாபுவிற்கும், சுந்தரமூர்த்திக்கும் வாய் தகராறு இருந்து வந்தது. நான் சென்று பார்த்த போது எதிரி சுந்தரமூர்த்தி பாபுவை கழுத்திலும், நெற்றியிலும், கன்னத்திலும் கத்தியால் குத்திவிட்டு எதிரி சுந்தரமூர்த்தி ஓடிவிட்டார். அதன் பிறகு நான் மருத்துவமனைக்கு தூக்கி சென்றேன். மருத்துவமனையில் பாபு இறந்து விட்டதாக கூறினார்கள். என்னிடம் காட்டப்படும் கத்தியைக் கொண்டு தான் பாபுவை சுந்தரமூர்த்தி குத்தினார். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** -

ஒம்/- கங்கைஅமரன்

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.

# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.

## SESSIONS CASE NO. 107/2014

## Deposition of Witness for : PW 7

| | |
|---|---|
| **Name** | : திரு. சௌந்தர் |
| **Father Name** | : |
| **Village** | : |
| **Taluk** | : |
| **Caste** | : |
| **Calling** | : |
| **Religion** | : |
| **Age** | : |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 30-09-2022.**

**முதல் விசாரணை** -

நான் தற்போது சிறுபாக்கம் கிராமத்தில் வசித்து வருகிறேன். இறந்து போன பாபுவை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். சுமார் 9 ஆண்டுகளுக்கு முன்பு எதிரிகளுக்கும் பாபு வகையறாவுக்கும் இடம் சம்மந்தமாக தகராறு இருந்து வந்தது. மாலை 6 மணியளவில் நான் கடைக்கு செல்வதற்காக நான் வீராசாமி வீட்டின் அருகே வந்தபோது எதிரி சுந்தரமூர்த்தி கத்தியால் பாபுவை குத்தியதாக கேள்வி பட்டேன். நான் சென்றபோது பாபு ரத்தக் காயத்துடன் இருந்தார். பாபுவை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். மருத்துவமனையில் பாபு இறந்து விட்டதாக கூறினார்கள். என்னை போலீசார் விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** -

நான் சென்று பார்த்த போது அங்கு 5 - 6 நபர்கள் கூடியிருந்தார்கள். அவர்கள் பேசிக்கொண்டு இருந்தார்கள். மற்றபடி எனக்கு எதுவும் தெரியாது. பாபுவுக்கும், எதிரிகளுக்கும் ஏற்கனவே நிலத்து தகராறு இருந்தது. நிலத்தகராறு இரு குடும்பத்தாருக்கும் இருந்து வந்த நிலையில் பாபு குடித்து விட்டு பாட்டில் குத்தி இறந்ததை காழ்ப்புணர்ச்சி காரணமாக எதிரிகள் மீது பொய் புகார் கொடுத்தற்கு நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/- சௌந்தர்

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**SESSIONS CASE NO. 107/2014**

**Deposition of Witness for : PW 8**

**Name** : திரு. பாக்கியராஜ்
**Father Name** :
**Village** :
**Taluk** :
**Caste** :
**Calling** :
**Religion** :
**Age** :

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 30-09-2022.**

முதல் விசாரணை -

நான் தற்போது கீழ்சிறுபாக்கம் கிராமத்தில் வசித்து வருகிறேன். இறந்து போன பாபுவை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். சுமார் 9 ஆண்டுகளுக்கு முன்பு அண்ணாமலை குடும்பத்தாருக்கும், பாபு வகையறாவுக்கும் சொத்து சம்மந்தமாக தகராறு இருந்து வந்தது. இறந்து போன பாபு வீராசாமி வீட்டின் தின்னையில் உட்கார்ந்து கொண்டு இருந்தார். எதிரி சுந்தரமூர்த்தி பாபுவிடம் வாக்குவாதம் செய்து கொண்டு இருந்தார். வழக்கமான சண்டை என்று தான் நாங்கள் நினைத்தோம். திடீர் என்று சுந்தரமூர்த்தி கத்தியை எடுத்து பாபுவின் கழுத்து, கன்னம் ஆகிய இடங்களில் குத்தினார். நாங்கள் பிடிக்க செல்லும் போது அவர் தப்பி ஓடிவிட்டார். பாபுவை நாங்கள் மருத்துவமனைக்கு தூக்கி சென்றோம். மருத்துவமனையில் பாபு இறந்து விட்டதாக கூறினார்கள். என்னை போலீசார் விசாரணை செய்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை -

என்னுடைய அத்தை மகன் தான் இறந்து போன பாபு. போலீசார் விசாரணையில் நான் சம்பவத்தை நேரில் பார்த்ததாக சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரி சுந்தமூர்த்தி பாபுவிடம் தகராறு செய்ததாகவும், அவர் பாபுவை கத்தியால் குத்தியதாகவும் தான் தூரத்தில் இருந்து பார்த்ததாக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இருவருக்கும் நிலத்தகராறு இருந்து வந்ததாலும், பாபு என் அத்தை மகன் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்தில் இல்லை என்றும், அதனால்

தான் நான் காயம்பட்டதாக சொல்லும் நபரை நான் மருத்துவமனைக்கு அழைத்து செல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் பார்க்காத சம்பவத்தை பார்த்ததாக பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

ஒம்/- பாக்கியராஜ்

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.